# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்
## Provincial Department of Education, Northern Province

## முதலாம் தவணைப் பரீட்சை – 2024

| தரம் - 12(2025) | கணக்கீடு | நேரம்: 3 மணி 10 நிமிடம் |
|---|---|---|

பெயர் / சுட்டெண் ...............................................................................................

**அறிவுறுத்தல்கள்:**
- ❖ பகுதி - I எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக.
- ❖ பகுதி - II முதலாம் வினா கட்டாயமானது. மொத்தமாக 4 வினாக்களுக்கு விடையளிக்குக.

**பகுதி - I**

1) "கணக்கீட்டு அலகு" என்பது
   1) உரிமையாளரில் இருந்து வேறான பொருளாதார அலகு
   2) இலாப நோக்குள்ள இலாப நோக்கற்ற எந்தவொரு நிறுவனமும்
   3) வரி செலுத்துகின்ற அனைத்து நிறுவனங்களும்
   4) அரச, தனியார், கூட்டுறவு நிறுவனங்கள் மாத்திரம்
   5) தனிநபர், வணிக அமைப்புக்கள், அரசு போன்ற எந்தவொரு அமைப்பும் (.........)

2) நிதிக்கணக்கீட்டுச் செயன்முறையின் செயற்பாடுகள் இடம்பெறும் சரியான ஒழுங்குவரிசையைத் தெரிவு செய்க.
   1) A - வகைப்படுத்தல்
   B - பொழிப்பாக்கல்
   C - பகுப்பாய்வு செய்தல்
   D - தகவல்களை இனங்காணல்
   E - பதிவு செய்தல்

   1) DACEB 2) DBACE 3) DAEBC 4) DEABC 5) DEACB (.........)

3) கணக்கீட்டு உள்ளீடுகள் தொடர்பில் சரியானவை எனக் கருதப்படும் தொகுதி
   1) வரலாற்றுத் தகவல்கள்
   2) எதிர்வு கூறல் தகவல்கள்
   3) கொடுக்கல் வாங்கல் நிகழ்வுகள்
   4) நிதிக் கூற்றுக்கள்
   5) எல்லைக் கிரயத் தகவல்கள் (.........)

4) கீழே தரப்பட்ட மாறிகளில் "நுட்பம் மற்றும் தொழில்சார்"சூழல் காரணிக்கு பொருத்தமானவை
   A - நவீன தொழில்நுட்பம் B - கணக்கீட்டு நியமங்கள்
   C - கணக்கீட்டு வாண்மைத் தொழில் நிறுவனங்கள் D - தொடர்பாடல் தொழில்நுட்பம்

   1) A,C 2) A,B 3) B,C 4) C,D 5) ABC (.........)

5) கணக்கீட்டு வெளியீடாக கருத முடியாதது?
   1) நிதிநிலைமைக் கூற்று
   2) உரிமையாண்மை மாற்றல் கூற்று
   3) இலாப நட்ட மற்றும் ஏனைய முற்றடக்க வருமானக்கூற்று
   4) காசுப்பாய்ச்சல் கூற்று
   5) இயக்குநர் அறிக்கை (.........)



kalvi.lk

6) கீழே தரப்பட்டுள்ள கணக்கீட்டு சமன்பாடுகளில் எது சரியானது?

A - தேறிய சொத்துக்கள் = உரிமையாண்மை
B - சொத்துக்கள் + வருமானங்கள் = உரிமையாண்மை + பொறுப்புக்கள் + செலவீனங்கள்
C - சொத்துக்கள் + செலவீனங்கள் = உரிமையாண்மை + பொறுப்புக்கள் + வருமானங்கள்
D - தேறிய சொத்துக்கள் = மொத்தச் சொத்துக்கள் - நடைமுறையற்ற பொறுப்புக்கள் - நடைமுறைப் பொறுப்புக்கள்

1) B,C 2) BCD 3) ACD 4) ABC 5) ABCD (.........)

7) நிறுவனமொன்று ரூ 600 000 பட்டியல் விலையில் 5% வியாபாரக் கழிவுடன் பொருட்களை கடனுக்கு கொள்வனது செய்து பின்னர் அதனை ரூ 650 000க்கு காசுக்கு விற்பனை செய்தது. கடன் கொடுநருக்கான கொடுப்பனவு இன்னமும் தீர்க்கப்படவில்லை. இக் கொடுக்கல் வாங்கல்களின் தேறிய விளைவு கணக்கீட்டு சமன்பாட்டில் ஏற்படுத்தும் தாக்கம்

| சொத்துக்கள் | பொறுப்புக்கள் | உரிமையாண்மை |
|---|---|---|
| 1) ரூ 50000 அதிகரிப்பு | - | ரூ 50000 அதிகரிப்பு |
| 2) ரூ 80000 அதிகரிப்பு | - | ரூ 80000 அதிகரிப்பு |
| 3) ரூ 80000 அதிகரிப்பு | ரூ 570 000 குறைவு | ரூ 650000 அதிகரிப்பு |
| 4) ரூ 650000 அதிகரிப்பு | ரூ 570 000 அதிகரிப்பு | ரூ 80000 அதிகரிப்பு |
| 5) ரூ 650000 அதிகரிப்பு | ரூ 600 000 அதிகரிப்பு | ரூ 50000 அதிகரிப்பு |

(.........)

- 8 ஆம் 9 ஆம் வினாக்களுக்கு விடையளிப்பதற்கு பின்வரும் தகவல்களை பயன்படுத்துக.

நிறுவனமொன்று ரூபா 100 000 காசினை முதலீடு செய்து 01.01.2024 இல் வணிகம் ஒன்றினை ஆரம்பித்தது. இவ்வணிகம் பெறுமதிசேர் வரி (VAT) இற்காக பதிவு செய்யப்பட்டுள்ளது.
கொள்வனவுகளிலும், விற்பனைகளிலும் பெறுமதிசேர் வரி (VAT) உள்ளடங்குகின்றது. 31.01.2024 இல் முடிவடையும் மாதகாலத்தில் பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் இடம் பெற்றிருந்தன.

- ரூபா 540 000 இற்குக் கடனுக்கு பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டன. (90000 (VAT) உள்ளடங்களாக)
- இப் பொருட்கள் அனைத்தும் ரூ 648 000 கடனுக்கு (72000 உள்ளடங்களாக) கடனுக்கு விற்பனை செய்யப்பட்டன.
- கடன்படுநரிடமிருந்து ரூபா 500 000 பெறப்பட்டது
- ரூ 360000க்கான வியாபார சென்மதியாளருக்கு ரூ 20000 கழிவுடன் காசு கொடுத்து தீர்க்கப்பட்டது.

8) 31.01.2024 இல் முடிவடைந்த மாதத்துக்கான கொள்வனவு விற்பனையால் எழுந்த மொத்த இலாபமும், 31.01.2024 இல் உள்ளவாறான காசு மீதியும்

| மொத்த இலாம் (ரூ 000ல்) | காசுக்கணக்கு மீதி (ரூ 000ல்) |
|---|---|
| 1) 100 | 160 |
| 2) 100 | 240 |
| 3) 100 | 260 |
| 4) 108 | 160 |
| 5) 108 | 260 |

(.........)

9) 31.01.2024 இல் உள்ளவாறு வணிகத்தின் மொத்தப் பொறுப்புக்கள் மற்றும் உரிமையாண்மை யாது?

| மொத்தப் பொறுப்புக்கள் (000ல்) | உரிமையாண்மை (000ல்) |
|---|---|
| 1) 180 | 120 |
| 2) 180 | 220 |
| 3) 188 | 220 |
| 4) 188 | 228 |
| 5) 200 | 228 |

(........)



kalvi.lk

◆ பின்வரும் தகவல்களை 10ம், 11ம், 12ம் வினாக்களுக்கு விடையளிக்க பயன்படுத்துக.

தர்மினி என்பவர் காகிதாதிகள் வணிகம் ஒன்றினை 01.01.2024 ஆரம்பித்தார். இவர் தனது தோழியான தர்சினியை வேலைக்கு அமர்த்தி இருந்தார். இவரது கொடுக்கல் வாங்கல் 2024 ஜனவரி மாதத்தில் பின்வருமாறு இடம்பெற்றது.

| கொடுக்கல் வாங்கல் இலக்கம் | கொடுக்கல் வாங்கல் | பெறுமதி (ரூபா 000 இல்) |
|---|---|---|
| (1) | மூலதனமிடப்பட்டது | 300 |
| (2) | மீள் விற்பனை பொருள் காசுக்கு கொள்வனவு | 200 |
| (3) | கடனுக்கு மீள் விற்பனை பொருள் கொள்வனவு | 550 |
| (4) | கடனுக்கு கொள்வனவில் வெளித்திருப்பம் | 50 |
| (5) | கடனுக்கு விற்பனை (64000 VAT உட்பட) | 864 |
| (6) | வேலையாள் சம்பளம் | 40 |

இம் மாதத்தில் விற்பனை செய்யப்பட்ட காகிதாதிகளின் கிரயம் ரூபா 500 000 ஆகும். 31.01.2024 செலுத்த வேண்டிய மின்சாரக் கட்டணம் 30000 ஆகும். ஏனைய செலவுகள் மீது VAT இல்லை எனக் கருதுக.

10) கொடுக்கல் வாங்கல் இலக்கம் 2, 3, 4, 5 ஆகியவற்றை பதிவதற்கு பயன்படுத்தப்படும் மூல ஆவணங்களின் ஒழுங்கு வரிசை

1) பட்டியல், பொருள் பெறுவனவு குறிப்பு, வரவுத்தாள், பட்டியல்
2) பட்டியல், பொருள் பெறுவனவு குறிப்பு, செலவுத்தாள், பட்டியல்
3) கொடுப்பனவு உறுதிச் சீட்டு, பட்டியல், வரவுத்தாள், பட்டியல்
4) கொடுப்பனவு உறுதிச்சீட்டு, பட்டியல், செலவுத்தாள், பட்டியல்
5) கொடுப்பனவு உறுதிச்சீட்டு, பட்டியல், செலவுத்தாள், நாட்குறிப்பு உறுதிச்சீட்டு (.........)

11) கொடுக்கல் வாங்கல்கள் 1, 2, 3, 4 ஆகியவற்றில் தேறிய விளைவினை பிரதிபலிக்கும் கணக்கீட்டுச் சமன்பாடு எது?

| | சொத்துக்கள் (ரூ 000ல்) | = பொறுப்புக்கள் (ரூ 000ல்) | + உரிமையாண்மை (000ல்) |
|---|---|---|---|
| 1) | + 800 | + 550 | + 250 |
| 2) | + 800 | + 500 | + 300 |
| 3) | + 850 | + 550 | + 300 |
| 4) | + 1000 | + 700 | + 300 |
| 5) | + 1000 | + 750 | + 250 |

(.........)

12) இவ்வணிகம் கடன்படுநர் கட்டுப்பாட்டுக் கணக்கினை பராமரிக்குமாயின் கொடுக்கல் வாங்கல் இலக்கம் 5 இனைப் பதிவதற்கான சரியான இரட்டைப் பதிவு எது?

| | | வரவு (ரூ 000) | செலவு (ரூ 000) |
|---|---|---|---|
| 1) | கடன்படுநர் கட்டுப்பாட்டு கணக்கு | 800 | |
| | விற்பனைக்கணக்கு | | 800 |
| 2) | கடன்படுநர் கட்டுப்பாட்டுக் கணக்கு | 864 | |
| | விற்பனைக்கணக்கு | | 864 |
| 3) | கடன்படுநர் கட்டுப்பாட்டு கணக்கு | 800 | |
| | VAT கட்டுப்பாடு | 64 | |
| | விற்பனைக் கணக்கு | | 864 |
| 4) | கடன்படுநர் கட்டுப்பாட்டு கணக்கு | 864 | |
| | விற்பனைக் கணக்கு | | 800 |
| | VAT கட்டுப்பாடு | | 64 |
| 5) | கடன்படுநர் கட்டுப்பாட்டு கணக்கு | 800 | |
| | VAT செலவீனம் | 64 | |
| | விற்பனைக் கணக்கு | | 800 |
| | VAT கட்டுப்பாட்டு கணக்கு | | 64 |

(.........)



kalvi.lk

13) கொள்வனவு நாளேட்டில் பின்வரும் கொடுக்கல் வாங்கல்களில் எது பதியப்படும்?
    1) கடனுக்கு கொள்வனவு செய்யப்பட்ட எல்லாச் சொத்துக்களும்
    2) மீள் விற்பனை செய்யும் நோக்கத்துடன் மேற்கொள்ளப்பட்ட எல்லாக் கொள்வனவுகளும்
    3) கடனுக்கு மீள் விற்பனை செய்யும் நோக்கத்துடன் மேற்கொள்ளப்பட்ட எல்லாக் கொள்வனவுகளும்
    4) கடனுக்கு கொள்வனவு செய்யப்பட்ட ஆதனம் பொறி மற்றும் இயந்திரம்
    5) மீள் விற்பனை செய்யும் நோக்குடன் மேற்கொள்ளப்பட்ட எல்லாக் கடன்கொள்வனவுகளும்
(.........)

- வணிகம் ஒன்றுடன் தொடர்பான பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி 14ஆம், 15ம் வினாக்களுக்கு விடையளிக்குக.

வியாபாரமொன்று தனது எல்லாக் காசுக் கொடுக்கல் வாங்கல்களையும் வங்கி நடைமுறைக்கூடாக மேற்கொள்கின்றது.

04.04.2024 இல் பெறப்பட்ட 2024 மார்ச் மாதத்துக்கான வங்கிக் கூற்று உருப்படிகள்.

| | (ரூ 000) |
|---|---|
| 01.03.2024 இல் மீதி | 100 |
| வசூலிக்கப்பட்ட காசோலைகள் | 1000 |
| சமர்ப்பிக்கப்பட்ட காசோலைகள் | 750 |
| வங்கி பெற்ற முதலீட்டு வருமானம் | 200 |
| வங்கி அறவிட்ட காசோலை புத்தக கட்டணம் | 50 |

2024 மார்ச் மாத காசுக் கட்டுப்பாட்டு கணக்கின் சுருக்கம்

| | (ரூ 000ல்) |
|---|---|
| 01.03.2024 ல் மீதி | 100 |
| 31.03.2024 ல் காசு பெறுவனவு நாளேட்டின் மொத்தம் | 1200 |
| 31.03.2024 ல் காசு கொடுப்பனவு நாளேட்டின் மொத்தம் | 900 |

முதலீட்டு வருமானம், வங்கி அறவீடுகள் வங்கிக் கூற்றினை பெற்ற பின்னரே புத்தகங்களில் பதியப்படுகின்றன.

01.03.2024 இல் வசூலிக்கப்படாத, சமர்ப்பிக்கப்படாத காசோலைகள் எதுவும் காணப்படவில்லை.

14) 2024 மார்ச் மாதத்திற்கான காசுக் கொடுக்கல் வாங்கல் தொடர்பில் சரியானவை
    A - 2024 மார்ச் மாதத்துக்கான காசுப் பெறுவனவுகளின் மொத்தம் ரூ 1400 000
    B - 2024 மார்ச் மாதத்துக்கான காசு கொடுப்பனவுகளின் மொத்தம் ரூ 950 000
    C - 31.03.2024 இல் வசூலிக்கப்படாத காசோலைகள் ரூபா 200 000 ஆகும்.
    D - 31.03.2024 இல் சமர்ப்பிக்கடாத காசோலை ரூபா 150 000 ஆகும்.
    1) A,B    2) A,C    3) B,D    4) C,D    5) ABCD    (........)

15) இவ்வணிகத்தின் திருத்திய காசுக் கட்டுப்பாட்டு கணக்குமீதி
    1) ரூபா 300 000    2) ரூபா 350 000    3) ரூ 400 000
    4) ரூபா 500 000    5) ரூபா 550 000    (.........)

(4x15= 60 புள்ளிளகள்)

- 16 - 25 வரையான வினாக்களுக்கு பொருத்தமான விடையினை இடைவெளியில் எழுதுக.

16) நிறுவனமொன்றின் முகாமைக் கணக்கீட்டுத் தகவல்கள் தொடர்பில் பின்வரும் கூற்றுக்கள் சரியா (T) பிழையா (F) எனக் குறிப்பிடுக.
    A - நிறுவனத்தின் பணரீதியான மற்றும் பணரீதியற்ற தகவல்கள் இரண்டினையும் வழங்குகின்றது. (.........)
    B - நிறுவனத்தின் எதிர்காலத் தகவல்களை மட்டும் வழங்குகின்றது. (.........)
    C - கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக நிதி அறிக்கைகளை வழங்குதல் (.........)
    D - நிறுவன முகாமையாளர்களின் வேண்டுதலுக்கமைவாக தகவல்களை உருவாக்கல் (.........)



kalvi.lk

17) வணிகம் ஒன்றில் பின்வரும் அக்கறையுடையோரில் எத்தகையோர் கீழே தரப்பட்டுள்ள தகவல்களில் அதிகூடிய அக்கறை உடையவர்களாக இருப்பர்?

1) முகாமையாளர்கள் 2) கடன்வழங்குநர்கள்
3) அரசாங்கம் 4) முதலீட்டாளர்கள்

A) ஈடுபடுத்திய மூலதனத்திற்கான இலாப உழைப்பு ..................................

B) மொத்த வரிவருமானத்தில் அதிகரிப்பினை ஏற்படுத்தல் ..................................

C) தயாரிக்கப்பட்ட திட்டங்கள் நிறைவேற்றப்படுதல் .................................

D) கடன்படப்பாடுகளை நிறைவேற்றவதற்கான நிறுவனத்தின் இயலுமை ..................................

18) பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் அதன் உரிமையாண்மையில் "அதிகரிப்பிற்கு"காரணமாயின் "✓" அடையாளம் இடுவதுடன் அதிகரிக்காததாயின் "×" எனவும் குறிப்பிடுக.

| கொடுக்கல் வாங்கல்கள் | உரிமையாண்மையில் அதிகரிப்பு |
|---|---|
| A - ரூபா 40000 கிரயமான பண்டங்கள் ரூபா 65000 கடனுக்கு விற்கப்பட்டது. | ............................................... |
| B - வியாபார சென்மதியாளருக்கு தனது சொந்தப்பணத்தில் இருந்து ரூ 15000 வியாபார சென்மதியை கொடுத்து தீர்த்தல் | ............................................... |
| C - தனக்கு உரித்தான ரூ 150000 பெறுமதியான தளபாடங்களை வணிகத்தின் பாவனைக்கு வழங்குதல் | ............................................... |
| D - கடன்படுனர் ஒருவருக்கு காசு செலுத்தும் போது ரூ 2500 கழிவினை அனுமதித்தல் | .............................................. |

19) பின்வருவனவற்றினை பதிவிடுவதற்கான இரட்டைப்பதிவினை எழுதுக. (விளம்பல் அவசியமில்லை)

அ) ரூ5000 காசுக்கழிவு அனுமதித்து கடன்படுநரிடம் பெற்று வங்கியில் வைப்பிலிட்ட ரூபா 75000 பெறுமதியான காசோலை மதிப்பிழந்தது.

.....................................................................................................................................................

.....................................................................................................................................................

.....................................................................................................................................................

ஆ) நிலையான கட்டளைக் கொடுப்பனவு - வங்கிக் கடன் தவணைக் கட்டணம் ரூ 80000 (ரூ 15000 வட்டி உள்ளடங்களாக)

.....................................................................................................................................................

.....................................................................................................................................................

.....................................................................................................................................................

20) பொதுப்பேரேட்டில் பராமரிக்கப்படும் பின்வரும் கணக்குகளுக்கு பொருத்தமான கணக்கு வகைப்படுத்தலைக் குறிப்பிடுக.

| <u>கணக்கு</u> | <u>வகைப்படுத்தல்</u> |
|---|---|
| A - பற்று | ..................................... |
| B - சென்மதி வாடகை | ..................................... |
| C - பெற்ற கழிவீடு | ..................................... |
| D - வற்கணக்கு (செலவு மீதி) | ..................................... |



kalvi.lk

21) வணிகமொன்றின் கணக்கீட்டுப் பதிவேடுகளில் இருந்து பின்வரும் தகவல்கள் பிரித்தெடுக்கப்பட்டுள்ளன.

| | 31.03.2024 (ரூ000) | 31.03.2023 ல் (000) |
|---|---|---|
| சொத்துக்கள் | 1900 | 1400 |
| பொறுப்புக்கள் | 1100 | 900 |

31.03.2024 முடிவடைந்த காலப்பகுதியில் உரிமையாளரால் 100000 பெறுமதியான சொந்த மோட்டார்வான் வணிகப்பாவனைக்கு வழங்கப்பட்டதுடன் தனது சொந்த நிதியை பயன்படுத்தி ரூபா 20000 பெறுமதியான வணிகப் பொறுப்புக்கள் தீர்க்கப்பட்டது. மேலும் தனது மகளின் சொந்த ஆயுள் காப்புறுதிக் கட்டணமாக மாதாந்தம் ரூ 7500 வீதம் வணிகப்பணத்தில் இருந்தும் செலுத்தப்படுகிறது. வேறு எந்தவிதமான பற்றுக்களும் வணிகத்தில் இடம் பெறவில்லை.
31.03.2024 இல் முடிவடைந்த வருடத்துக்கான

அ) இலாபம் ரூ ......................................

ஆ) நிறுத்தி வைத்த வருவாய் ரூ ......................................

22) வணிகமொன்றின் காசு மீதியாக ரூபா 45000 31.03.2024 இல் இருந்தது. இம் மீதியானது வங்கிக் கூற்று மீதியுடன் இணங்கவில்லை. இம் மீதிகளின் வேறுபாட்டிற்கான காரணங்கள்

- கம்பனி ஒன்றினால் நேரடியாக வைப்புச் செய்யப்பட்ட பங்கிலாப வருமானம் ரூபா 80000
- வாடிக்கையாளரிடம் பெற்று வங்கியில் வைப்புச் செய்தபோது வங்கியால் மதிப்பிழப்புச் செய்யப்பட்ட காசோலை ரூபா 60000
- வங்கியினால் இன்னமும் தீர்வையாகப்படாத காசோலை ரூபா 20000
- வங்கி அறவிட்ட மேலதிகப்பற்று வட்டி ரூபா 40000
- வரைந்து வழங்கிக் கூற்றில் வரவு வைக்கபடாத காசோலைகள் ரூபா 30000

பின்வருவனவற்றை 31.03.2024 இல் உள்ளபடி கணிப்பிடுக.

அ) சீராக்கிய காசு மீதி ......................................................................................................................

ஆ) வங்கிக் கூற்று மீதி ......................................................................................................................

23) 2024 மார்ச் மாத்தில் சில்லறைக்காசு செலவுகள் ரூபா 26000 நிறுவனம் ஒன்றினால் செலவிடப்பட்டிருந்தது. 31.03.2024 சில்லறைக் காசாளரிடம் காணப்பட்ட சில்லறைக் காசு மீதி ரூபா 9000 ஆக இருந்தது.
வேண்டப்படுவது

அ) வணிகத்தின் சில்லறைக் காசு முற்பணம் ரூபா

......................................................................................................................

ஆ) சில்லறைக் காசு முற்பணம் மீள் நிரம்பலுக்கான நாளேட்டுப் பதிவு (விளம்பல் அவசியமில்லை)

......................................................................................................................

24) விநாயகர் வணிகம் தனது செயற்பாடுகளை 01.04.2023 இல் ஆரம்பித்தது. 2023 ஏப்ரல் மாதத்திற்கான பின்வரும் தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன.

ஆரம்பப்பதிவேடுகளின் மொத்தம் (ரூ000)

| | |
|---|---|
| கொள்வனவு நாளேடு | 200 |
| கொள்வனவு திரும்பல் நாளேடு | 10 |
| விற்பனைத் திரும்பல் நாளேடு | 20 |
| விற்பனை நாளேடு | 220 |



kalvi.lk

மேலதிக தகவல்கள் (ரூ 000ல்)
விற்பனைக் கிரயம் 110
செயற்பாட்டு செலவுகள் (கழிவுகள் தவிர) 60
பெற்ற வியாபாரக் கழிவு 20
பெற்ற காசு கழிவு 5
அனுமதித்த காசு கழிவு 10
கொடுத்த வியாபார கழிவு 8

2023 ஏப்ரல் மாதத்திற்கான இனங்காணப்பட்ட "மொத்த வருமானம்" மற்றும் மொத்தச் செலவுகள்

அ) மொத்த வருமானம் ரூ ......................................

ஆ) மொத்த செலவீனங்கள் ரூ ......................................

25) 31.03.2023 இல் உள்ளவாறு வணிகமொன்றின் கடன்படுநர் கட்டுப்பாட்டுக்கணக்கு மீதி ரூபா 560000 ஆக இருந்தது. இது இத் திகதியில் கடன்படுநர் பேரேட்டு அட்டவணை மீதி மொத்தத்துடன் இணங்கவில்லை. தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட பரிசீலணையில் பின்வருவன வெளிப்பட்டன.

- கடன்படுநர் பேரேட்டில் கொடுத்த கழிவாக பதியப்பட்ட ரூபா 20000 ஆனது கடன்படுநர் கட்டுப்பாட்டுக் கணக்கில் பதியப்பட்டிருக்கவில்லை.
- ரூ 42000 விற்பனைப் பட்டியல் ஒன்று விற்பனை நாளேட்டில் ரூ 24000 ஆகப் பதியப்பட்டிருந்தது. எனினும் இது கடன்படுநர் பேரேட்டில் சரியாகப் பதியப்பட்டிருந்தது.

31.03.2023 இல் உள்ளவாறு பின்வருவனவற்றை அடையாளம் காண்க.

அ) மேற்படி வழுக்களைத் திருத்துவதற்கு முன்னர் கடன்படுநர் பேரேட்டு மீதிகளின் மொத்தம்

ரூ ..................................................................................................................................

ஆ) மேற்படி வழுக்களைத் திருத்திய பின் கடன்படுநர் கட்டுப்பாட்டு கணக்கின் திருத்திய மீதி

ரூ ..................................................................................................................................

(4x10= 40 புள்ளிகள்)

மொத்தம் 100 புள்ளிகள்)

## பகுதி II

01. சீமான் வணிகத்தின் 01.01.2024 இல் உள்ள மீதிகள் வருமாறு. இவ்வணிகம் VAT (பெறுமதி சேர்வரி) இற்கு பதிவு செய்த வணிகமாகும்.

| | |
|---|---|
| கடன்படுநர் கட்டுப்பாட்டு கணக்கு மீதி | 45000 |
| வியாபார சென்மதியாளர் கணக்கு மீதி | 63000 |
| தளபாடம் (கிரயம்) | 170000 |
| காசுக்கட்டுப்பாட்டு கணக்கு மீதி | 75000 |
| வங்கிக் கடன் | 60000 |
| செய்மதி VAT கணக்கு | 7000 |
| மூலதனம் | ? |

<u>கடன்படுநர் பேரேட்டு மீதிகள் வருமாறு</u>

| | |
|---|---|
| குணாளன் | 20 000 |
| செல்வி | 15 000 |
| சுதா | 10 000 |
| | 45 000 |

<u>கடன்கொடுநர் பேரேட்டு மீதிகள் வருமாறு</u>

| | |
|---|---|
| மாதவி | 23 000 |
| சிவராம் | 30 000 |
| பசுபதி | 10 000 |
| | 63 000 |

- <u>2024 ஜனவரி மாத கொள்வனவு பட்டியல்களின் தொகுப்பு</u>

02.01.2024 பட்டியல் இல 155 மாதவி (1800 VAT உள்ளடங்கலாக) 13800
06.01.2024 பட்டியல் இல 175 சிவராம் (3000 VAT உள்ளடங்களாக) 23000
15.01.2024 பட்டியல் இல 225 பசுபதி (4500 VAT உள்ளடங்களாக) 34500
23.01.2024 பட்டியல் இல 265 குமரன் (1300 VAT உள்ளடங்களாக) 25300

- <u>2024 ஜனவரி மாத விற்பனை பட்டியல்களின் தொகுப்பு</u>

04.01.2024 பட்டியல் இல 101 குணாளன் (3800 VAT உள்ளடங்கலாக) 36800
10.01.2024 பட்டியல் இல 102 செல்வி (3000 VAT உள்ளடங்களாக) 46000
16.01.2024 பட்டியல் இல 103 சுதா (2700 VAT உள்ளடங்களாக) 20700
26.01.2024 பட்டியல் இல 104 அருணா (3700 VAT உள்ளடங்களாக) 43700

- <u>2024 ஜனவரி பற்றுச் சீட்டுக்களின் தொகுப்பில் இருந்து எடுக்கப்பட்ட தகவல்கள்</u>

05.01.2024 பற்றுச்சீட்டு இல 66 பெற்றதரகு வருமானம் ரூ 20000
05.01.2024 பற்றுச்சீட்டு இல 67 குணாளனிடம் பெற்ற காசு ரூ 18000 கொடுத்த கழிவு 2000
10.01.2024 பற்றுச்சீட்டு இல 68 மேலதிக மூலதனமாக கொண்டு வந்த காசு ரூ 50000
22.01.2024 பற்றுச்சீட்டு இல 69 செல்வியிடம் பெற்ற காசு ரூ 30000 அனுமதித்த கழிவு ரூ 3000
24.01.2024 பற்றுச்சீட்டு இல 70 அருணாவிடம் பெற்றகாசு ரூ 9000 கொடுத்த கழிவு ரூ1000
26.01.2024 பற்றுச்சீட்டு இல 71 விற்பனையால் பெற்ற காசு ரூ 20000



kalvi.lk

- <u>2024 ஜனவரி மாதம் கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்களில் இருந்து எடுக்கப்பட்ட தகவல்கள்</u>
  03.01.2024 உறுதிச்சீட்டு இல 150 தளபாடம் வாங்கியது ரூ 30000
  10.01.2024 உறுதிச்சீட்டு இல 151 வாடகை செலுத்தியது ரூ 15000
  16.01.2024 உறுதிச்சீட்டு இல 152 மாதவிக்கு கொடுத்தது ரூ 6000 பெற்ற கழிவு 500
  18.01.2024 உறுதிச்சீட்டு இல 153 சிவராமுக்கு கொடுத்தது ரூ 11000 பெற்ற காசு கழிவு 1000
  24.01.2024 உறுதிச்சீட்டு இல 154 பசுபதிக்கு கொடுத்தது ரூ 23000 பெற்ற காசு 2500
  30.01.2024 உறுதிச்சீட்டு இல 155 செலுத்திய VAT ரூ 6000
  31.01.2024 உறுத்திச்சீட்டு இல 156 காசுக்கொள்வனவு ரூ 13000

  வேண்டப்படுவது
  1) முதன்மை ஏட்டுப்பதிவுகள்
  2) பொதுப்பேரேட்டில் கட்டுப்பாட்டுக் கணக்குகளும், ஏனைய பேரேட்டுக் கணக்குகளும் பரீட்சை மீதியும்

(மொத்தம் 40 புள்ளிகள்)

02. பின்வரும் மீதிகள் காவியா வணிகத்திலிருந்து 01.01.2024 ல் பெறப்பட்டது.

| **சொத்துக்கள்** | **(ரூ 000ல்)** |
|---|---|
| ஆதனம் பொறி மற்றும் உபகரணம் | 1600 |
| சரக்கிருப்பு | 200 |
| வியாபார வருமதிகள் | 350 |
| காசு | 180 |
| மூலதனம் | 1800 |
| நிறுத்தி வைத்த வருவாய் | 250 |
| வங்கிக்கடன் | 150 |
| வியாபார கொடுக்குமதிகள் | 130 |

- ஜனவரி மாதத்தில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்களும் நிகழ்வுகளும் பின்வருமாறு
  1) 03.01.2024 பண்டங்கள் கடனுக்கு கொள்வனவு ரூபா 150 000
  2) 05.01.2024 ரூபா 80000 கிரயமான பண்டங்கள் 25% இலாபத்தில் கடனுக்கு விற்கப்பட்டது.
  3) 07.01.2024 ரூபா 30000 வியாபார கொடுக்குமதிகளை தீர்க்கும் பொருட்டு ரூபா 25000 காசு செலுத்தப்பட்டது.
  4) 09.01.2024 செலுத்திய சம்பளம் ரூ 36000
  5) 10.01.2024 05.01.2024 இல் விற்கப்பட்ட பண்டங்களில் ரூபா 25000 விற்பனை விலையானவை வாடிக்கையாளரால் திருப்பி அனுப்பப்பட்டது.
  6) 12.01.2024 உரிமையாளர் மேலதிக மூலதனமாக ரூபா 200000 அறிமுகப்படுத்தினார்.
  7) 14.01.2024 உரிமையாளரின் தனிப்பட்ட செலவிற்காக ரூபா 25000 காசோலை வழங்கப்பட்டது.
  8) 16.01.2024 செலுத்திய வங்கிக்கடன் தவணைப்பணம் ரூபா 50000 வட்டி ரூபா 5000 உட்பட
  9) 18.01.2024 ரூபா 45000 பெறுமதியான பண்டங்கள் ரூபா 40000 இற்கு காசுக்கு விற்கப்பட்டது.
  10) 20.01.2024 பெற்ற வாடகை வருமானம் ரூபா 18000
  11) 21.01.2024 வியாபார வருமதிகளில் ரூபா 20000 அறவிடமுடியா கடனாக பதிலளிக்குக.
  12) 23.01.2024 ரூபா 60000 கிரயமான பண்டங்கள் ரூபா 100000 கடனுக்கு விற்கப்பட்டது.
  13) 24.01.2024 வங்கிக்கடன் மூலம் ரூபா200000 பெறுமதியான தளபாடங்கள் கொள்வனவு செய்யப்பட்டது.



kalvi.lk

14) 27.01.2024 ஆதனம் பொறி உபகரண பெறுமான தேய்வு இக்காலப்பகுதிக்கு ரூபா 32000
15) 30.01.2024 இம்மாதத்திற்கான வங்கி கட்டணம் மற்றும் காசோலை புத்தக கட்டணம் ரூபா 15000

வேண்டப்படுவது

i. பின்வரும் அட்டவணையைப் பயன்படுத்தி மேற்கூறப்பட்ட கொடுக்கல் வாங்கல்களையும் நிகழ்வுகளையும் பதிவு செய்க. (ரூ 000ல்)

| இல | ஆ.பொ.உப கரணம் | சரக்கிருப்பு | வியாபார வருமதிகள் | காசு | மூலதனம் | நி.வை வருவாய் | வங்கி கடன் | வியாபார கொடுக்குமதி |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | |

ii. தேறிய சொத்து அடிப்படையில் இலாபம் / நட்டத்தினை கணிப்பிடுக.

(20 புள்ளிகள்)

03. யதுசன் வணிகத்தின் 2023 நவம்பர் மாத வங்கிக்கணக்கிணக்கக்கூற்றில் பின்வரும் காசோலைகள் மாற்றப்படாதிருந்ததை காட்டியது.
காசோலை இல : 15610 ரூபா 12 300
காசோலை இல : 15621 ரூபா 8500

டிசம்பர் மாத 2023 வங்கிக்கூற்று வருமாறு

| திகதி | விபரம் | வரவு | செலவு | மீதி |
|---|---|---|---|---|
| 01.12.2023 | மீதி வந்தது | | | 26 700 |
| 02.12.2023 | நேரடி வைப்பு | | 15 000 | 41 700 |
| 03.12.2023 | காசோலை வைப்பு 431160 | | 6 500 | 48 200 |
| 04.12.2023 | காசோலை இல 15610 | 12 300 | | 35 900 |
| 08.12.2023 | பங்கிலாபம் | | 3 000 | 38 900 |
| 10.12.2023 | காசோலை வைப்பு 386410 | | 11 000 | 49 900 |
| 12.12.2023 | நிலையான கட்டளை - காப்புறுதி | 2 500 | | 47 400 |
| 16.12.2023 | காசோலை இல 15625 | 12 000 | | 35 400 |
| 20.12.2023 | காசு வைப்பு | | 10 000 | 45 400 |
| 21.12.2023 | காசோலை இல 15626 | 6 400 | | 39 000 |
| 22.12.2023 | காசோலை வைப்பு 28630 | | 16 000 | 55 000 |
| 26.12.2023 | காசோலை இல 15627 | 5 000 | | 50 000 |
| 28.12.2023 | நிலையான வைப்பு வட்டி | | 7 000 | 57 000 |
| 30.12.2023 | காசோலை வைப்பு 38310 | | 12 000 | 69 000 |
| 31.12.2023 | மறுக்கப்பட்ட காசோலை 38310 | 12 000 | | 57 000 |

மேலதிக தகவல்கள்

1)

| காசோலை வைப்பு | ரூபா | காசோலை கொடுப்பனவு | ரூபா |
|---|---|---|---|
| 03.12.2023 காசோலை இல 431160 | 6500 | 14.12.2023 சம்பளம் 15625 | 12 000 |
| 09.12.2023 காசோலை இல 386410 | 11000 | 20.12.2023 மின்கட்டணம் 15626 | 6400 |
| 20.12.2023 காசோலை இல 28630 | 16000 | 26.12.2023 விநோதா 15627 | 5000 |
| 30.12.2023 காசோலை இல 38310 | 12000 | 30.12.2023 சீராளன் 15628 | 11 500 |
| 31.12.2023 காசோலை இல 24560 | 6200 | | |

2) விநோதாவிற்கு வழங்கப்பட்ட காசோலை காசு கொடுப்பனவு நாளோட்டில் ரூபா 500 என பதியப்பட்டது.
3) காசுக் கணக்கின் வரவு பக்கம் ரூபா 1000 ஆல் கூட்டிக் கூட்டப்பட்டிருந்தது.

வேண்டப்படுவது
1) 2023 டிசம்பர் மாதத்திற்கான திருத்த முன் காசுக்கணக்கு (சுருக்கம்)
2) திருத்திய காசுக்கணக்கு
3) 2023 டிசம்பர் மாத வங்கிக்கணக்கிணக்க கூற்று

(20 புள்ளிகள்)

04. அ. பின்வரும் நடவடிக்கைகள் வலம்புரி நிறுவனத்தில் 2024 ஜனவரி மாத்தில் இடம்பெற்றவை

| கடன் பட்டோர் | 01.01.2024 இல் வரவு மீதி | கடன் விற்பனை | பெறுமதிசேர் வரி (10%) | பெற்ற காசு | கொடுத்த கழிவு | அளவிட முடியா கடன் |
|---|---|---|---|---|---|---|
| சாளினி | 50 000 | 30 000 | 3000 | 60 000 | 150 | ...................... |
| சங்கவி | 20 000 | 10 000 | 1000 | 24 000 | 300 | மீதி முழுவதும் |
| சாம்பவி | 16 000 | 16 000 | 1600 | 15 000 | 600 | ...................... |
| சாமினி | 14 400 | 20 000 | 2000 | 13 000 | 280 | 400 |

இந் நிறுவனம் VAT அறவீட்டுக்காக பதிவு செய்யப்பட்ட நிறுவனம் என்பதோடு பேரேடுகளை துணைப்பேரேடு, பொதுப்பேரேடு எனவும் பராமரித்து வருகின்றது.
வேண்டப்படுவன.
1) விற்பனை நாளேடு (பெறுமதி சேர்வரி உட்பட)
2) கடன்படுநர் பேரேட்டில் ஆள்சார் கணக்குகளும், பட்டோலை மீதியும்
3) பொதுப்பேரேட்டில் அவசியமான கணக்குகள் (கட்டுப்பாட்டு கணக்கு உட்பட)

(10 புள்ளிகள்)

ஆ. சந்தியா வியாபாரத்தின் 2024.01.01 ஆந் திகதியின் சில்லறை காசுக்கணக்கின் மீதி ரூபா 2000 ஆக இருந்தது.
2024 ஜனவரி மாதத்தில் சில்லறை காசாளருடன் தொடர்புடைய கொடுக்கல் வாங்கல் வருமாறு, 01.01.2024 இல் சில்லறை காசாளருக்கு ரூ 18 000 காசு மீள்நிரப்பப்பட்டது. கொடுப்பனவு விபரம் வருமாறு,

| | | ரூபா |
|---|---|---|
| 05.01.2024 | ஏற்றுக்கூலி (சி.கை.இ 01) | 1000 |
| 08.01.2024 | முச்சக்கரவண்டி வாடகை (சி.கை.இ 02) | 800 |
| 10.01.2024 | சுத்தப்படுத்தல் செலவு (சி.கை.இ 03) | 1100 |
| 14.01.2024 | இறக்கும் கூலி (சி.கை.இ 04) | 900 |
| 16.01.2024 | உரிமையாளர் எடுப்பனவு (சி.கை.இ 05) | 2000 |
| 18.01.2024 | வாடகை கார் கட்டணம் (சி.கை.இ 06) | 1500 |
| 20.01.2024 | சுத்தப்படுத்தல் செலவு (சி.கை.இ 07) | 1200 |
| 22.01.2024 | வழங்குனரான மாலதிக்கு கொடுப்பனவு (சி.கை.இ 08) | 2500 |
| 23.01.2024 | புகையிரத வண்டிச்சீட்டு (சி.கை.இ 09) | 1200 |
| 25.01.2024 | ஏற்றுக்கூலி (சி.கை.இ 10) | 800 |

வேண்டப்படுவது
1) சில்லறை காசு கொடுப்பனவு நாளோடு
(ஏற்றி இறக்கும் கூலி, சுத்தப்படுத்தல், பிரயாணம் மற்றும் ஏனைய கொடுப்பனவு ஆகிய நிரல்களுடன்)
2) சில்லறைக் காசுக் கணக்கும் ஏனைய பேரேட்டு கணக்குகளும்
(பொதுப்பேரேட்டில் காணப்படுகின்றவாறு)

(10 புள்ளிகள்)
(மொத்தம் 20 புள்ளிகள்)



kalvi.lk

05. அ. "இசைநிலா'' வணிகத்தின் 2024 ஜனவரி மாதத்துக்கான சில தகவல்கள் வருமாறு

1) 1. ஜனவரி 2024ல் உள்ள பொதுப்பேரேட்டில் உள்ள மீதிகள்

| | |
|---|---|
| மோட்டார் வான் | ரூ 65 000 |
| சரக்கிருப்பு | ரூ 30 000 |
| வியாபார வருமதி | ரூ 42 000 |
| வியாபார சென்மதி | ரூ 33 000 |
| காசுக்கட்டுப்பாட்டு கணக்கு | ரூ 23 000 |
| வங்கிக்கடன் | ரூ 60 000 |
| மூலதனம் | ரூ 67 000 |

2. 05.01.2024ல் ரத்தினா மோட்டார் கம்பனியிடம் கடனுக்கு வாங்கிய மோட்டார் வான் ரூபா 125000
3. 31.01.2024இல் தமிழ்அழகி தரவேண்டிய ரூபா 10000 அறவிடமுடியா கடனாக பதிவளிக்கப்பட்டது தயாரிக்குக.

பொது நாட்குறிப்பேட்டில் பின்வரும் விடயங்களை பதிவு செய்க. (விளம்பல் அவசியம்)

(5 புள்ளிகள்)

ஆ. சர்மி வணிகத்தின் கணக்கு பதிவாளர் பரீட்சை மீதியை தயாரித்த போது சமப்படவில்லை அவ் வித்தியாசம் தொங்கல் கணக்கில் பதியப்பட்டு பின்னர் பின்வரும் தவறுகள் கண்டுபிடிக்கப்பட்டன.

**31 மார்ச் 2024 இல் தயாரிக்கப்பட்ட பரீட்சை மீதி**

| | | |
|---|---|---|
| விநியோகவான் | 370 000 | |
| கடன்படுநர் கட்டுப்பாட்டு கணக்கு | 63 000 | |
| கடன் கொடுத்தோர் கட்டுப்பாட்டு கணக்கு | | 84000 |
| தொங்கல் கணக்கு | 11 000 | |
| காசு மீதி | 53 000 | |
| சம்பள கணக்கு | 32 000 | |
| வங்கிக்கடன் | | 150 000 |
| கொள்வனவு | 145 000 | |
| விற்பனை | | 240 000 |
| மூலதனம் | | 200 000 |
| | 674 000 | 674 000 |

1) விற்பனை நாளேட்டின் ஒரு பக்க கூட்டுத்தொகை ரூபா 45 000 தவறவிடப்பட்டது.
2) விநியோக வான் திருத்த செலவு ரூபா 70000 விநியோக வான் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தது.
3) காசு கொடுப்பனவு நாளேட்டின் கழிவு நிரல் கூட்டுத்தொகை ரூபா 15000 பொதுப் பேரேட்டில் பதியப்படவில்லை
4) செலுத்திய வங்கிக் கடன் ரூபா 20 000 காசு கொடுப்பனவு நாளேட்டில் பதியப்பட்டு காசுகட்டுப்பாட்டு கணக்கில் பதியப்பட்டது எனினும் வங்கிக் கடன் கணக்கில் பதியப்படவில்லை.
5) செலுத்திய சம்பளம் ரூபா 23000 சம்பள கணக்கில் ரூபா 32000 என பதியப்பட்டது.

வேண்டப்படுவது

1) தவறுகளை திருத்துதவதற்கான நாட்குறிப்பு பதிவுகள்
2) தொங்கல் கணக்கு
3) தவறுகளை திருத்திய பின் சரியான பரீட்சை மீதி

(15 புள்ளிகள்)



kalvi.lk